விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 023 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 27 சனிக்கிழமை (11.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அரசியல் தீர்வு விவகாரம்
# அநுர அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்
### சிறீதரன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

அனைத்து இன மக்களும் இந்த அரசாங்கத்தில் பங்குதாரர்களாக உள்ளனர். ஆகவே, அரசியல் தீர்வு விவகாரம் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். தீர்வுத் திட்டத்தில் அரசாங்கம் சிறந்த தீர்மானத்தை எடுத்தால் 15

## பாதுகாப்பைப் பலவீனப்படுத்தவே
# வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன - சரத் வீரசேகர

(கொழும்பு)



தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தும் வகையில்தான் வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படு கின்றன என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். 15

## அயல் வீட்டாரைக் குழாயினால் தாக்கிய
## ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர்
# உதயங்க வீரதுங்க கைது
### தன்னை விடுதலை செய்யாவிடின் விமானங்களுக்கு எரிபொருள் கிடைக்காதாம்



(கொழும்பு)

அயல் வீட்டாரைக் குழாயினால் தாக்கிய குற்றச்சாட்டில் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க கைது செய்யப் பட்டுள்ளார்.

தன்னை ஒரு கிழமைக்குள் விடுதலை செய்யா விடின் விமானங்களுக்கு எரிபொருள் கிடைக் காது என கைதாகும்போது ஊடகங்களிடம் தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.கல்வி கண்காட்சி
## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி மற்றும் துறை சார் வழிகாட்டல் கண்காட்சியான "யாழ்.கல்விக் கண்காட்சி 2025" இன்று சனிக் கிழமை காலை 9.30 15

## 90 வகையான
# மருந்துகளின் விலைகளை குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

90 வகையான மருந்துகளின் விலைகளை குறைப் பதற்கு ஔடதங்கள் 15

# வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை வாக்களித்ததற்கு மக்கள் வருந்துகின்றனர்
### ருவன் விஜேவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி வருவதால் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்கள் தற்போது கவலைப்படுகின்றனர் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கியதேசியக்கட்சித்தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப் 15

# மதவாச்சியில் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

(வவுனியா)



மதவாச்சியில் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட் டுள்ளது.

மதவாச்சிப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கட்டுவெல மயானத்துக்கு அருகிலுள்ள குழியில் நேற்று முன்தினம் மாலை குறித்த பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 30 முதல் 15

# ஹெரோயின் வைத்திருந்த
## 26 வயது இளைஞனுக்கு ஆயுள் தண்டனை

(கொழும்பு)

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த 26 வயது இளைஞன் ஒருவனுக்கு கொழும்பு மேல் நீதி மன்றத்தால் நேற்று 15

# கிளிநொச்சியில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம் பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி கணேச புரத்தைச் சேர்ந்த மோகலிங்கம் குமரேசன் (வயது-74) என்பவரே உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த அரச பேருந்து கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக வீதியைக் கடந்த குறித்த குடும்பஸ்தரை மோதியதில் இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. 15

# பொலிஸ் எனத் தெரிவித்து ரூ.50 ஆயிரம் வழிப்பறி
### கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் எனக் கூறி 50 ஆயிரம் ரூபாயை வழிப்பறி செய்த வழிப் பறிக் கொள்ளையர்கள் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கோண்டாவில் பழனி யாண்டவர் ஆலயத்திற்கு அருகில் நேற்று முன்தினம் நின்ற இருவர் வீதியில் வந்த நபரை வழிமறித்து, தம்மைப் பொலிஸார் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான
றோயல் நெய்
Royal
உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை
தரமான றோயல் நெய் கொண்டு
தயாரித்த அறுசுவை உணவுகளுடன்
கொண்டாடி மகிழுங்கள்
ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க் கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்
Marketed By :-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567
Packed By:-
Royal Industries®
(C-2006)



## ரஷ்யாவுக்...

ரஷ்யாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தனது அயல் வீட்டாருக்கு வீட்டுக் காணியின் எல்லைச்சுவரை உடைப்பது தொடர்பான வாக்குவாதத்தால் பிளாஸ்ரிக் குழாயினால் தாக்கிய நிலையில் அயல் வீட்டைச்சேர்ந்த 66 வயதான குடும்பஸ்தர் ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளைமேற்கொண்ட மிரிஹான பொலிஸார் உதயங்க வீரதுங்கவை கைது செய்து நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுப் பிற்பகல் ஆஜர்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து எதிர் வரும் 17ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸார் உதயங்க வீரதுங்கவை பேருந்தில் ஏற்றும்போது ஊடகங்களிடம் கருத்துக் கூறுகையில், தன்னை ஒரு கிழமைக்குள் விடுதலை செய்யாவிடின் நாட்டுக்கு வருகின்ற விமானங்களுக்கு எரிபொருள் கிடைக்காது. இதற்கு வருத்தப் படுவதாகத் தெரிவித்துள்ளார்.

(மற்றொரு செய்தி உள்ளே) (ம-7)

உடனடி வேலை வாய்ப்புக்கள்
யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு
City Tex - Nallur
அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.சம்பளம் - 35000+ Bonos, வயது : 18-25 வரை.
வேலை நேரம் : காலை 9.00 - இரவு 8.30 வரை.
மதிய உணவு, தேநீர் வழங்கப்படும்.
(2992)
021 221 6185, 077 293 5537

புதிய ஆண்டுக்கான வகுப்புக்கள் ஆரம்பம்
தரம் : 01 - 03 வகுப்புக்களும் மற்றும் தரம் : 06 - 09 வரையான வகுப்புக்களிற்கு வரலாறு, குடியியல் போன்ற வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தனிப்பட்ட முறையில் வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும்.(C-2010)
தொடர்புகளுக்கு:
077 428 6976

Tharany
SUPERMARKET
எமது மாணவச் செல்வங்களுக்காக
தாரணி சூப்பர்மார்க்கெட்டின் அதிரடி சலுகை
5 கட்டு கொப்பிகள்
2 வாங்கினால்,
அதே 5 கட்டு கொப்பிகள்
2 இலவசம்
Free
இச்சலுகை
2025/01/15
அன்று மட்டுமே..
No 758, KKS Road, Jaffna, Sri Lanka
077 1997 206
*நிபந்தனைக்குட்பட்டது
(C-2003)



வேலையாள் தேவை
நவாலியில் அமைந்துள்ள
வியாபார ஸ்தாபனத்திற்கு
களஞ்சியப் பொறுப்பாளர் தேவை.
(2995)
தொடர்புகளுக்கு:
077 713 0839

STUDY IN UK
CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND
IELTS
இம்மாதம் முழுவதும் நிபந்தனைகள் எதுவும் இல்லா 100% இலவச
விசா ஆலோசனைகள் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் வழங்கப்படும்
WEC COLLEGE
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
மற்றும் கிளை : சாவகச்சேரி
0779265447/ 0217200989



புதியபிரிவுகள் ஆரம்பம்
18/01/2025
தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat [ Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
(Medium – Tamil & English)
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level I,II
Qualification:-G.C.E. A/L 3 Passes
(Medium – Tamil &English)
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF
Qualification:- G.C.E. A/L 3 Passes
( Medium – Tamil & English)
G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்திருப்பவர்களும் கற்கலாம்
Certificate Course in English
Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0774405917
(C-2008)

# மரண அறிவித்தல்

## கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்)

(வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், கலட்டி கற்பக விநாயகர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், உரிமையாளர் – SKAT கேபிள் விசன் (கட்டப்பிராய்), வரதன் எலக்ரோனிக், சரண்யா கொமினிக்கேசன்)



தோற்றம் 14.06.1964 | மறைவு 10.01.2025

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.66, சீனியர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்) அவர்கள் நேற்று (10.01.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும் நவரத்தினம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் கலாராணி அவர்களின் பாசமிகு கணவரும் சுகிர்தா (சிரேஷ்ட விரிவுரையாளர் - தொ.நுட்ப பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சரண்யா (Trendy Jaffna), துளசிகா (Boc Jaffna), அபிநந்தன் (4 ஆம் வருட முகாமைத்துவப்பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜராஜ், ரமேஸ்குமார், லிங்கராஜ் (Boc) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ஷா, பிரஜித், பிரகதி ஆகியோரின் பேரனும் புஸ்பமாலா, ஸ்ரீஸ்காந்தன் (பத்திரிகை முகவர் - புங்குடுதீவு), இரஞ்சிதமாலா, சிறிதரன் (பொலிவியா), காலஞ்சென்ற ஜீவமாலா மற்றும் சிறிபாலன் (ஜேர்மன்), ஜெயமாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினவேல் (அத்தான்), வசந்தா, தர்மசேனன் (பெயின்ரர்), விஜயலலிதா, காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் அருளானந்தம், கிருபானந்தன், திருவேணி, மணிமேகலா, சுமதி, அகிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (கைலைவாசம்) நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"கைலைவாசம்"
இல.66, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(C-2009)
தகவல்: குடும்பத்தினர்
076 732 0241, 076 260 5226

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 01 - 1951



இறப்பு 10 - 01 - 2025

## அருளானந்தம் வசந்தாதேவி

வேலணையைப் பிறப்பிடமாகவும் குளப்பிட்டி ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் வசந்தாதேவி அவர்கள் 10.01.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலகுபிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதிகளின் மருமகளும் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும் தவமணிதேவி(கந்தசாமி), அருட்செல்வம்(ராஜேஸ்வரி), பஞ்சலிங்கம்(சரோஜினிதேவி), காந்திமலர்(சண்முகநாதன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜீவதர்சன், போஜினி, மயூரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் குணாளினி, சசீதரன், அபிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜினி, ஜுசிசன், ராகல்வியா, ஆதித்தியன், அதிரன், யாழமுதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.01.2025) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2007)
தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு செய்யப்படாத தொலைபேசிகளுக்குத் தடை?

**(கொழும்பு) நாட்டில் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவில் (TRC) பதிவு செய்யப்படாத கையடக்க தொலைபேசிகள் உள்ளிட்ட தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது எதிர்காலத்தில் தடை செய்யப்படும் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜெனரல் ஓய்வுபெற்ற ஏர் வைஸ் மார்ஷல் பந்துல ஹேரத் தெரிவித்துள்ளார்.**

நாட்டுக்குள் சட்டவிரோதமாக தகவல் தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்துவதே இதன் நோக்கம் எனவும் இந்த புதிய திட்டம் தற்போது பயன்படுத்தப்படும் கையடக்க தொலைபேசிகளில் தலையிடாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முறையான தரநிலைகள் இல்லாமல் சட்டவிரோதத் தகவல் தொடர்பு சாதனங்களை வாங்குவதன் மூலம் நாட்டு மக்கள் பல்வேறு சிரமங்களையும் தடைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

நாட்டிலுள்ள நுகர்வோருக்கு இதுபோன்ற சாதனங்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பது எமது நிறுவனத்தின் முக்கிய பொறுப்பாகும்.

இதற்காக இம்மாத இறுதிக்குள் ஒரு தானியங்கி அமைப்பை செயற்படுத்த எதிர்பார்க்கின்றோம். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், இறுதியில் நாட்டுக்குள் சட்டவிரோதமாக கையடக்க தொலைபேசிகளை இறக்குமதி செய்வதைத் தடுப்பதும் இதன் நோக்கமாகும்.

இந்த அமைப்பு தற்போது பயன்பாட்டிலுள்ள எந்த கையடக்க தொலைபேசிகளையும் பாதிக்காது என்பதுடன், வெளிநாட்டினர் பயன்படுத்தும் தொலைபேசிகளுக்கும் எந்த தடையும் ஏற்படுத்தாது என அவர் தெரிவித்தார். (6)

# சுமார் ஆயிரம் கொள்கலன்கள் தேங்கியவாறு துறைமுகத்தில்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் துறைமுகத்தில் 800-1000 கொள்கலன்கள் தேங்கிக் கிடப்பதாகப் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

துறைமுக அதிகாரசபை மற்றும் சுங்கத் திணைக்களத்தின் நிர்வாகத்தில் நிலவும் குறைபாடுகள் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

இதற்கிடையில் கொள்கலன் அனுமதி தாமதம் காரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை 20% அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# பெப்ரவரியில் வெளியாகும் புலமைப்பரிசில் பெறுபேறுகள்

## பரீட்சைகள் ஆணையாளர்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் பெப்ரவரி 10 - 12 ஆம் திகதிகளுக்கு இடையில் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.



விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணி கடந்த புதன் கிழமை 64 நிலையங்களில் தொடங்கியது.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை செப்ரெம்பர் 15 ஆம் திகதி நடைபெற்றது.

சிங்கள மொழி மூலம் 244,092 பேரும் தமிழ் மொழி மூலம் 79, 787 பேர் உட்பட மொத்தம் 323,879 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# அரிசி தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யக்கோரி

## கவனயீர்ப்பு போராட்டம்



(அக்கரப்பத்தனை)

அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி அக்கரப்பத்தனை மன்றாசி நகரில் வர்த்தகர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அக்கரப்பத்தனை, மன்றாசி நகர வர்த்தகர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது, அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதால் அதனை உரிய வகையில் நுகர்வோருக்கு விற்கமுடியாத சூழ்நிலை ஏற்படுவதாகவும் இதனால் சிறு வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் தைப்பொங்கல் வருகின்றது. இதற்கு பொங்கல் பொங்குவதற்கு சிவப்பு அரிசி உள்ளிட்ட அரிசி வகைகள் தேவைப்படுகின்றது. எனினும், அரிசித் தட்டுப்பாடு நிலவுகின்றது.

கட்டுப்பாட்டு விலைக்குதான் எங்களுக்கு அரிசி வழங்கப்படுகின்றது. அவ்வாறு கட்டுப்பாட்டு விலையை மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

ஆகவே கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கும், அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்தனர். (6)

# முன்னாள் தூதுவர் உதயங்க கைது



(கொழும்பு)

ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை மிரிஹான பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது அயல் வீட்டில் வசிக்கும் நபர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (6)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் அரியாலை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களில் இருந்து இரு பிரதிநிதிகள் பங்குபற்றலாம் என யாழ் மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் [illegible] அறிவித்துள்ளார். (6-90)

# தமிழாராய்ச்சி படுகொலையின் 51 ஆவது ஆண்டு நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 51 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை 9:30 மணிக்கு யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது

இதன் போது உயிரிழந்த ஒன்பது உறவுகளையும் நினைவு கூறி அமைக்கப்பட்ட நினைவுத்தூபியின் முன் சி.வீ.கே சிவஞானத்தினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டு அக வணக்கமும் செலுத்தப்பட்டது.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சொலமன் சிறில், சித்தார்த்தன், சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரான சுகிர்தன், யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் ஆர்னோல்ட், இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராயில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 18 அடிப் பாதையுடன், நன்னீருற்று
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து 500 m தூரம்
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற் வீதியிலிருந்து 50 m தூரம்
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை.

குரு

**077 638 5683**
**076 755 8606**

(2996)


# இலங்கை ஒலிம்பிக்குழுவின் செயலாளர் இடைநிறுத்தம்

தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளர் நாயகம் மெக்ஸ்வெல் டி சில்வா விளையாட்டு அமைச்சினால் உடனடியாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் காணப்படுவதாகவும் அது தொடர்பான விசாரணைகள் முடியும்வரை இந்த இடைநீக்கம் நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளர் நாயகம் மெக்ஸ்வெல் டி சில்வா உட்பட்ட சிலர், நெறிமுறை மீறல்கள் மற்றும் தவறான நடத்தைக்காக விதிக்கப்பட்ட இடைநீக்கத்தைத் தொடர்ந்து மீறி வருகிறார்கள் என்று எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, சர்வதேச ஒலிம்பிக் குழுவிடம் இருந்து பணம் பெற்றிருந்தாலும், ரியோ ஒலிம்பிக்கின் போது பயணம் மற்றும் தங்குமிடத்திற்காக டி சில்வா மற்றும் பெர்னாண்டோ ஆகியோர் தலா 10 ஆயிரம் டொலர்களைக் கோரியதாக இலங்கை அரச கணக்காய்வு அலுவலகம் கண்டறிந்திருந்தது.

அத்துடன் விளையாட்டு அமைச்சின் தேவையான ஒப்புதல்களைத் தவிர்த்து, 2022 பேர்மிங்காம் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்கான இலங்கைக் குழுவில் ஆறு பேரை முறையற்ற முறையில் சேர்த்தமை போன்ற அங்கீகரிக்கப்படாத செயல்கள் தொடர்பிலும் சில்வா மீது சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின் றோட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 1 ½ , 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப் பாதையுடன், நிலப் பரப்பு, மேட்டு நிலம், நன்னீருற்று
- UDA அனுமதி, பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்,
- தரகர் தேவையில்லை
- பரம்பரை ஆவணம்
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை

குரு

**077 468 3354**

(2996)


## பருத்தித்துறை நகர சபை

### மரக்கறிச் சந்தை இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

நவீன சந்தைக் கடைத்தொகுதியின் மேல்மாடியில் இயங்கி வந்த **மரக்கறிச் சந்தையானது** பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நன்மை கருதி, எதிர்வரும் 16.01.2025 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் முதலாம் குறுக்குத்தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டடத்தில் இயங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

தற்போது இயங்கி வரும் பழைய சந்தையில், தற்போது வரை விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வியாபாரிகள் அனைவரும், புதிய சந்தைக் கட்டடத்திற்காக முன்னுரிமை அடிப்படையில் தங்களுக்கு வழங்கப்பட்ட / தங்களால் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட விற்பனை மேடைகளில் விற்பனை நடவடிக்கைகளை 16.01.2025 ஆம் திகதி முதல் ஆரம்பித்து, பொதுமக்களுக்கும் சபைக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

திருமதி.தாரணி கஜரூபன்
செயலாளர்
பருத்தித்துறை நகர சபை (C-2012) 11.01.2025


## பணம்! பணம்!! பணம்!!!



பழைய கூறை புடவைகள் இங்கு வாங்கப்படும்.

ரூ.500 முதல் ரூ.30,000 வரை

புடவையின் தரத்திற்கு ஏற்ப வாங்கப்படும்.

பழைய காஞ்சிபுரம், பனாரஸ் மற்றும் ரிசு (Tissue) புடவைகள் வாங்கப்படும்.

குறிப்பு : இந்தச் சலுகை (11.01.2025,12.01.2025, 13.01.2025) சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே.

வாரீர், வாரீர்

பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

(2993)

தொடர்புகட்கு:-

Mobile : 075 946 6407/ 077 676 3409
Whatsapp : 91 866 721 0812

இடம் : GER - CEY GUEST HOUSE
120 1/1, Hospital Road
Near Letro Gas Koddady, Jaffna


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1939 - 01 - 16 | 2025 - 01 - 10 |



### திருமதி பரமசிவம் நீலாயதாட்க்ஷி

பதுளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமசிவம் நீலாயதாட்க்ஷி அவர்கள் நேற்று 10.01.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பத்தர் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குப்புசாமி பத்தர் - கமலம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமசிவம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமசிவம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற இந்திராணி மற்றும் மாரியாய் அவர்களின் மைத்துனியும் கருணாகரன், கமலேஸ்வரி, நகுலேஸ்வரி, சொர்ணாம்பிகை, கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயன், செல்வராஜ், சுரேஸ், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கார்த்திகா, தரங்கிணி, சுரபூஜிதா, மதிஷண், யதிசன், அபிலாஷ், பிரியங்கா, கீர்த்தனா, நதிஷனா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற சாந்தி மற்றும் ரமணி, ஜெயந்தி, ஜானகி, இந்திரகுமார், ரமேஸ், தினேஷ், விஜயா, சர்வேஸ், பவித்திரா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(2997)

இல.30, [illegible] வீதி,
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
077 844 5309, 077 968 8105
077 563 2642, 077 837 4994
தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 25, கப்பண்டா கடவை வீதி, வட்டாரம் - 07

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-07 கப்பண்டா கடவை வீதியிலுள்ள இல: 25 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **கணபதி கந்தையா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஓர் பகுதியினை **பொன்னையா சண்முகநாதன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு V.S.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 610/08.04.1946ஆம் இலக்க உறுதியால் **இராமநாதர் பொன்னையா கைம்பெண் ரட்ணம்** ஆகியவரிடமிருந்து நன்கொடையாக பெற்றுச் சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கணபதி கந்தையாவும் பெண் தங்கச்சியம்மாவும்** ஆகியவர்கள் மேற்படி ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு சி.த.நடராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4592/15.11.1958ஆம் இலக்க உறுதியால் **வயித்திலிங்கம் நாகேந்திரமும் பெண் சரஸ்வதியும், பொன்னையா சண்முகநாதனும், நாகமணி குணரத்தினமும் பெண் மகேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்றுச் சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த **கணபதி கந்தையாவும் பெண் தங்கச்சியம்மாவும்** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான **கந்தையா அரியரட்ணமும், கந்தையா அருந்தவராஜாவும், ரவீந்திரன் அருந்தவச்செல்வியும்** ஆகியோருக்கு முதுசமாக வந்தடைந்தது.

**இரவீந்திரன் சுஜீந்தன்** ஆகியவர் மேற்படி ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஓர் பகுதியினை பிரசித்த நொத்தாரிசு K.பிரதீபா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2946/19.11.2023ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா அரியரட்ணமும், கந்தையா அருந்தவராஜாவும், ரவீந்திரன் அருந்தவச்செல்வியும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் 03 ஆதனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள போதும் குறித்த மூன்றாவது ஆதனத்திற்குரிய அடியுறுதி விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மாறாக குறித்த ஆதனம் தமது பெற்றோராகிய கணபதி கந்தையாவும் பெண் தங்கச்சியம்மாவும் ஆகியவர்கள் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள் எனவும், குறித்த அறுதி உறுதி தொலைந்து விட்டதாகவும், குறித்த கணபதி கந்தையாவும் பெண் தங்கச்சியம்மாவும் காலம்செல்ல குறித்த ஆதனம் கந்தையா அரியரட்ணமும், கந்தையா அருந்தவராஜாவும், ரவீந்திரன் அருந்தவச்செல்வியும் ஆகியோருக்கு முதுசமாக வந்தடைந்ததெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த **இரவீந்திரன் சுஜீந்தன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **இரவீந்திரன் சுஜீந்தன்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**

(529)

# பருத்தித்துறை பொதுச்சந்தை ஆளுநரினால் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை மரக்கறி பொதுச் சந்தை நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநரினால் திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் செயலர் திருமதி.தாரணி கஜமுகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், பருத்தித்துறை பிரதேச செயலர் சத்தியசீலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி.தேவநந்தினி பாபு, யாழ்.மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பொ.சிறீவர்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (6-33)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 25.07.1948

மறைவு 12.12.2024

### அமரர். சிவலிங்கம் தனேஸ்வரலிங்கம்

உங்கள் மதிமுகமும் மகிழ்வான பேச்சும் அழகான புன்சிரிப்பும் மறைந்து 31 நாட்கள் கடந்தாலும் உங்கள் நினைவும் என்றும் எம்மனதில் இருக்கும் எண்ணிப்பார்க்க இதயங்கள் கனக்கின்றன எமக்கு ஆறுதலாக இருந்த உங்களை வெல்வில் முருகன்பாதமதில் இருத்தி ஆத்ம சாந்தி அடைய வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

11.01.2025 இன்று சனிக்கிழமை காலை10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தேவாலய வீதி,
சங்கானை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(519)


# இராசிபலன்

11.01.2025
மார்கழி 27 , சனிக்கிழமை
துவாதசி முற்பகல் 8.19 மணிவரை
ரோகினி பிற்பகல் 12.40 மணிவரை

சுபநேரம் 3.33-5.03 மணிவரை
இராகுகாலம் 9.33-11.03 மணிவரை
சனிப்பிரதோச விரதம், அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்.
சுவாதி, விசாகம்.

**வளவன்**




வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் என்பன ஏற்படலாம்.




உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியான நாள்.




தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




உறவினர், நண்பர்கள் சந்திப்புகள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், யாராவது உதவி கேட்டு வரலாம்.




வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாறுக் கருத்துடையோர் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டாகும்.




இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.




மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உடன்பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

பொய்க்கு கால்கள் கிடையாது ஆனால் இறக்கைகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கபடி அணியில் யாழினைச் சேர்ந்த பியங்கா

(யாழ்ப்பாணம்)

இலங்கை கபடி அணியில் யாழினைச் சேர்ந்த யுவதி வி.ஆர்.பியங்கா இடம்பிடித்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக சப்ரா கபடி அணியில் விளையாடி வந்த நிலையில் இலங்கை கபடி அணியில் இடம் பிடித்துள்ளார். இவர் உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் ஆவார்.



இந்நிலையில் இலங்கை கபடி அணி இந்தியாவுக்கு புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# பிரதி ஞாயிறு தோறும் மத்தியஸ்தர் சபை

(குருநகர்)

யாழ்.இணக்கசபையானது (மத்தியஸ்தர் சபை) கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து மாதத்தில் வருகின்ற ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும் என தவிசாளர் முரளிதரன் கௌரி அறிவித்துள்ளார். (6-106)

# கேரதீவில் கட்டாக்காலி மாடுகளால் நெற்பயிர்கள் அழிவு

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட தனங்கிளப்பு கேரதீவு வயல்வெளிப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் தொடர்ச்சியாக நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடந்த புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் நேரடியாகச் சென்று முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தனங்கிளப்புப் பகுதியில் உள்ள அரச காணியில் மாடுகளைப் பட்டியில் அடைத்து வளர்ப்பார்கள். பகல் வேளைகளில் மாடுகளின் பட்டி அவிழ்த்து விடப்படுவதால் அவை அருகில் உள்ள நெற் பயிர்களைத் தொடர்ச்சியாக அழித்து வருகின்றன.

இந்நிலையில் அண்மையில் இவ்வாறு வயல் நிலங்களில் பயிர்களை அழித்த சுமார் 40 மாடுகளை வயல் உரிமையாளர்கள் பிடித்துக்கட்டி வைத்துவிட்டு உரிய திணைக்களங்களுக்கு தகவல் வழங்கிய போதிலும் குறித்த மாடுகள் இரவோடு இரவாக அங்கிருந்து இனந்தெரியாதோரால் அவிழ்த்துச் செல்லப்பட்டு மீண்டும் பயிர்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-30)



பொன்னாலை ஸ்ரீ வரதாராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா வைகுண்ட ஏகாதசி தினமான நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# சுண்ணக்கல் அகழ்வில் ஈடுபட்ட கனரக வாகனம்

## நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வைத்து வழிமறிக்கப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சுண்ணக்கல்லை ஏற்றிச்சென்ற கனரக வாகனம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வைத்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

மேற்படி சுண்ணக்கல்லை ஏற்றி வந்த வாகனத்தில் ஏதேனும் சந்தேகத்திற்கு இடமான பொருட்களை மறைத்து எடுத்துச் சென்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்ட நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் சுண்ணக்கற்களை வாகனத்தில் இருந்து அகற்றி சோதனைக்கு உட்படுத்தியிருந்தனர்.

மேற்படி சோதனை நடவடிக்கையின் போது எந்தவொரு சந்தேகத்திற்கிடமான பொருட்களும் இல்லாத நிலையில் பொலிஸார் கனரக வாகனம் மற்றும் சுண்ணக்கற்களை சாவகச்சேரி நீதிமன்றில் பாரப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் மேற்படி சுண்ணக்கற்களின் மாதிரிகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் முகமாக உரிய திணைக்களத்திற்கு அனுப்பி வைத்திருப்பதுடன் கனரகவாகனத்தின் தரம் தொடர்பாகவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் மேற்படி இரு பரிசோதனை அறிக்கை முடிவுகளின் அடிப்படையிலேயே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-30)

# யோகாப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான எளியமுறை யோகாப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற் பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் ஜி.நாகராஜன் வழங்கவுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 076 857 1395 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# பொங்கல் கொண்டாட்ட விளையாட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் பாரம்பரிய விளையாட்டு விழாக்களுடனான பொங்கல் கொண்டாட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக வடமாகாணரீதியான சைக்கிள் ஓட்டப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு இளவாலை சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. அதே வேளை இன்று மாலை 3 மணிக்கு சிறுவர்களுக்கான பட்டமேற்றல் போட்டி சேந்தாங்குளம் கடற்கரையில் இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு சித்திரமேழிச் சந்தியிலிருந்து ஆண்களுக்கான மரதனோட்டப் போட்டியும் எதிர்வரும் 14 ஆம் திகதி பொங்கல் தினத்தன்று காலை 8 மணி முதல் காங்கேசன்துறை வெளிச்சவீட்டருகே மாபெரும் பட்டத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

பொங்கல் தினத்தன்று மாலை நிகழ்வுகளாக பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளான கிடுகு பின்னுதல், கயிறுமுத்தல், தலகணைச்சண்டை, சறுக்குமரம்ஏறுதல், தேங்காய் துருவுதல் மற்றும் சிறார்களுக்கான போட்டிகளும் கலை, கலாசார நிகழ்வுகளும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

(யாழ்ப்பாணம்)

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தும் விளையாட்டு நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலய முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

இதன் முன்னோடி நிகழ்வுகளாக வேகச் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மற்றும் சிறுவர் மரதன் ஓட்டப் போட்டிகள் என்பன இடம் பெறவுள்ளதுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் மதியம் 1 மணியளவில் மாட்டுச் சவாரி, உதைபந்தாட்டம், கயிறுமுத்தல் மற்றும் சிறுவர்களுக்கான நிகழ்வுகளும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# திருநெல்வேலி யாழ்கோவின் செயற்பாடுகள் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் யாழ்கோ பால் உற்பத்தி தொழிற்சாலையின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்கோ பால் உற்பத்தி தொழிற்சாலை புனருத்தாரண வேலைகள் நிறைவு பெற்ற நிலையில் நேற்று முதல் மீண்டும் உற்பத்தி செயற்பாடுகளான பால், தயிர், கப்பால், மில்க்லொலி, மில்க்ரொபி, யோக்கட், பன்னீர், நெய், சுவைப்பால், கப்தயிர் பதப்பட்ட பால் மற்றும் சர்பத் என்பனவற்றை வழமை போல் பெற்றுக் கொள்ள முடியும் என மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க (யாழ்கோ) பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (6)



சுன்னாகம் புகையிரத நிலையம் கடந்த 5 ஆம் திகதி 10 ஆவது ஆண்டினை நிறைவு செய்துள்ள நிலையில் மேடைப் பயணிகள் இருக்கைகள் மற்றும் பயன்தரும் மரக்கன்றுகள் நலன்விரும்பிகளால் நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை குறித்த நிலையத்தில் பயணிகள் நூலகமும் இயங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA EDUCATION FAIR 2025
Your Future Begins Here...
5TH EDITION

வலம்புரியின் ஊடக அனுசரனையில்

## யாழ். கல்விக் கண்காட்சி சிறப்புமலர் - 2025

# இலங்கையின் முதன்மையானதும், அதியுயர் தரம் வாய்ந்த நிபுணத்துவக்கல்வி நிறுவனமான Onlineaccounting.lk உடன் O/L & A/L இன் பின்னர் இணையவும்.

## AFTER A/L

**Do you want to become a CEO, Director, or a leader in a business?**

START CA | START ACCA

இந்தத் தகுதிகளை நீங்கள் நிறைவு செய்த பின்னர் ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மத்திய கிழக்கு மற்றும் பல முன்னணி நாடுகளில் நேரடி வேலைவாய்ப்புக்களைப் பெறும் அரிய சந்தர்ப்பம்

## AFTER O/L

START AAT | START ACCA



**Learn Anytime, Anywhere, & Any Number of Times**

இலங்கையில் உள்ள ஒவ்வொரு மாணவருக்குமான சமமான கல்வி வாய்ப்புக்களை நாங்கள் வழங்குகின்றோம்.

ONLINE ACCOUNTING.LK

CA ACCA aat SRI LANKA CMA

**Contact Us**

011 281 3399 | 076 494 3533
Send a WhatsApp Message: 076 494 3533
Visit Our Website:
www.onlineaccounting.lk

JAFFNA EDUCATION FAIR 2025
Your Future Begins Here...

யாழ். கல்விக் கண்காட்சியில்
11, 12 ஆம் திகதிகளில் எங்களைச் சந்தியுங்கள்.

(C-037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA EDUCATION FAIR 2025 — Your Future Begins Here... — 5TH EDITION

## வலம்புரியின் ஊடக அனுசரணையில்
# யாழ். கல்விக் கண்காட்சி சிறப்புமலர் - 2025

## உலக அங்கீகாரம் பெற்ற பட்டத்தை
### மிகக்குறைந்த சலுகைகளுடன் பெறுங்கள்

விளம்பர விபரணம்




இலங்கையின் முதல் தர வெளிநாட்டுக் கல்வி வழங்குநரான REC Campusஉடன் உங்கள் உலக ளாவிய கல்விப் பயணத்தைத் தொடங்குங்கள்:

28 ஆண்டுகளுக்கும் மேலாக, REC Campus ஆனது இலங்கை மாணவர்களின் வெளிநாட்டில் உயர்கல்வியை தொடரும் கனவு களை நோக்கி வழிகாட்டுவதில் நம்பகமான முன்னோடியாக இருந்து வருகிறது. 2024ஆம் ஆண்டின் சிறந்த சர்வதேச கல்வி ஆலோசகராக REC Campus இற்கு ஆசியா மிராக்கிள் விருது - 2024 என்ற விருதினை வழங்கி அங்கீகரிக்கப்பட்டது மற்றும் தேசிய வணிக சிறப்பு விருதுகள் 2024 இல் இரண்டு மதிப்புமிக்க மெரிட் விருதுகளுடன் கௌரவிக்கப்பட்டது என்பது சிறப்பம்சமாகும்.

Kursk State Medical University மற்றும் State Medical University in Russia, Grodno State Medical University (GRSMU), Gomel State Medical University, Lincoln University College in Malaysia மற்றும் நேபாளத்தில் உள்ள Manipal Medical University உட்பட, உலகளாவிய மதிப்புமிக்க பல்கலைக்கழகங்களுடன் நாங்கள் கூட்டுச் சேர்ந்துள்ளோம். அதோடு ஐரோப்பா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் கனடா முழுவதும் உள்ள முதன்மையான பல்கலைக்கழகங்களுக்கும் எங்கள் சேவை விரிவடைகிறது.

**REC Campus ஐ ஏன் தேர்வு செய்ய வேண்டும் ?**

- முழுமையான உதவி: பல்கலைக்கழக அனுமதி, விசா ஏற்பாடுகள் முதல் தங்குமிடம் மற்றும் 24 மணிநேர உதவி வரை, REC வளாகம் மாணவர்கள், அவர்களது குடும்பங்களுக்குமென அழுத்தமில்லாத பயணத்தை உறுதி செய்கிறது.
- வெளிப்படையான செலவுகள் மற்றும் மறைக்கப்பட்ட கட்டணங்கள் இல்லாமல், வெளிநாடுகளில் உள்ள இதேபோன்ற திட்டங்களின் செலவில் ஒரு பகுதியிலேயே மாணவர்கள் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களைப் பெற முடியும்.
- உலகளாவிய வாழ்க்கைக்கான உத்தரவாதமான பாதைகள்: ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் வேலை செய்வதற்கும் குடியேறுவதற்குமான சந்தர்ப்பத்தினை ERPM (Sri Lanka), UKMLE (UK), AMC (Australia), USMLE (USA) போன்ற தேர்வுகளுக்கான வழிகாட்டுதலை REC Campus வழங்குகிறது.
- மாணவர்களுக்கான சேவைகள்: வளாகத்தில் உள்ள REC ஊழியர்கள் மாணவர்களின் பாதுகாப்பு, கல்வி சார்ந்த அறிவுரைகள், மருத்துவ அவசரநிலைகள், விமானப் போக்குவரத்துக்கள் மற்றும் பெற்றோர் சந்திப்புகள் போன்ற அனைத்துக்கும் ஆதரவை வழங்குகிறார்கள்.


REC CAMPUS

28 EXCELLENCE YEARS

ADMISSIONS FOR WORLD RECOGNIZED STATE MEDICAL UNIVERSITIES 2025 / 2026

**MBBS / MD**

SLMC Approved University (WHO, GMC, AMC, ECFMG, etc.)

- **Kursk** State Medical University
- **Tver** State Medical University
- **Grodno** State Medical University
- **Gomel** State Medical University

- REC branch in every university
- Educational Loans
- Guidance for ERPM/ AMC/ PLAB/ USMLE through EdCare programme
- Career guidance after internship
- **Free** Pre Introductory course & 2 set of scrubs cloths for registered Medicine students
- **Free** language programme



English Medium

Semester **Fee** Starting from - $2050

**ENGINEERING**
**AVIATION & OTHER COURSES**

| AUSTRALIA | CANADA | UK | RUSSIA |
| --- | --- | --- | --- |
| LATVIA | BELARUS | MALAYSIA | HUNGARY |

GUARANTEED

#181, High level Road, Nugegoda

HOTLINE 0711 10 10 10

www.reccampus.com

(C-035)



# யாழ் மாபெரும் உயர்கல்விக் கண்காட்சி

# இன்று ஆரம்பம்

11th & 12th January 2025

VALAMPURI HOTEL JAFFNA

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!

விபரங்களுக்கு அழையுங்கள்

0756244170
0775656633

JAFFNA EDUCATION FAIR 2025
Your Future Begins Here...

5TH EDITION

- வெற்றிகரமாக ஐந்தாவது ஆண்டாகவும் யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய உயர் கல்விக் கண்காட்சி
- உலகின் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூர் உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரில் சந்திக்கலாம்
- A/L 2024 உயர்தர பரீட்சை முடிந்துவிட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் உங்களுக்கு சிறந்த தெரிவுகள்.
- நீங்கள் வெளிநாட்டில் குடிபெயர அல்லது உயர் கல்வியை தொடர திட்டமிட்டிருந்தால், உங்களுக்கு சிறந்த களம்
- இலவச புலமைப்பரிசில்கள்
- உடனடி அனுமதிகளுக்கு சிறப்பு தள்ளுபடிகள் என இன்னும் பல சலுகைகள்.



அனுமதி இலவசம்

PLATINUM SPONSOR: A·P·I·I·T inspire love for learning, StudyGlobal by APIIT
GOLD SPONSOR: BCAS CAMPUS, NORTHERN UNI, NEW ZEALAND FUTURE CENTRE, ESOFT METRO CAMPUS
CA, CA SAB CAMPUS
SILVER SPONSOR: SCOT
OFFICIAL RADIO PARTNER
PRINT MEDIA PARTNER: வலம்புரி
SUPPORTED BY
ORGANIZED BY: EVOLUTION
DIGITAL MEDIA PARTNER: SAKSI TV


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA EDUCATION FAIR 2025
Your Future Begins Here...
5TH EDITION

வலம்புரியின் ஊடக அனுசரணையில்

# யாழ். கல்விக் கண்காட்சி சிறப்புமலர் – 2025

Imperial College
*of Business Studies*

## ஒரே கூரையின் கீழ் உங்கள் எதிர்காலத்தை தேர்ந்தெடுங்கள்

**UNIVERSITY OF THE WEST of SCOTLAND – UWS**

- **MBA**: International Business
- **BA**: (Hons) International Business & Finance; Global Business

**Queen Margaret University EDINBURGH**

- **MBA**: General; HR; Business Analytics
- **MSc**: Strategic Marketing
- **BSc**: (Hons) Marketing; (Hons) HR; (Hons) International Business

Imperial College *of Business Studies*

**CIMA**: Certificate Level; CGMA FLP; A Star Pathway; C-SEP; C-Suite

**SQA**: International Degree Foundation; International Specialised Diploma – Marketing; HR; International Business

## வெளிநாட்டில் கல்வி கற்க விரும்புவோருக்கான ஆலோசனைகள் மற்றும் விசா சேவைகளை நாம் வழங்குகின்றோம்

- பல்கலைக்கழகங்களுக்கான நேரடி உள்நுழைவு
- பரிமாற்ற வழிகளுக்கான தெரிவுகள்

(C-036)

COLOMBO CAMPUS – 0773 918 777 | 320 1/1 Galle Rd, Colombo 00300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச, ஊழல் விசாரணை
## ஆணைக்குழுவிற்கு புதிய பணிப்பாளர்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவை நியமித்துள்ளார்.

இதற்கமைவாக நியமனக் கடிதம் ஜனதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவுக்கு நேற்று வழங்கப்பட்டது. (6)

# ஞானசார தேரரின்
## பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

இஸ்லாம் மதத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வெலிக்கடை சிறைச்சாலையின் சாதாரண கைதிகள் தடுத்து வைக்கப்படும் அறையில் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் திகதி கிருலப்பனை பகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இஸ்லாம் மதத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானதேரர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவருக்கு 9 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் 1,500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனைக்கு எதிராக பொது பலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரினால் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இருப்பினும் குறித்த பிணை மனு நிராகரிக்கப்பட்டதுடன் அத்தகைய பிணை மனுவை பரிசீலிப்பதற்கான விசேட காரணங்களை முன்வைக்கு மாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 850 | 1000 | 700-800 | 1000 |
| தக்காளி | 350 | 350 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 220 | 250-300 | 200 |
| கோவா | 180 | 200 | 250 | 250 | 250 |
| கரட் | 200 | 250 | 300 | 300 | 300 |
| பூசணி | 140 | 120 | 150 | 100-120 | 200 |
| புடோல் | 200 | 250 | 200 | 250 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 80-120 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 380 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 350 | 100 | 300 |
| பாகற்காய் | 800 | 650 | 600 | 500-600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 200 | 180 | 200 |
| பயற்றங்காய் | 400 | 500 | 400 | 700 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 600 | 300 | 500 | 350 | 600 |
| கறிமிளகாய் | 850 | 650 | 600 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 1600 | -- | -- |
| போஞ்சி | 300 | 300 | 400 | 400-450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 300 | 350 | 200 | 200-250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 100-180 | 180-230 |
| இராசவள்ளி | 500 | 650 | 600 | 800 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 700 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 220 | 200 | 200 | 150 | 250 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 180 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | [illegible] | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 90 | 200 |

# இன்று ஒரு தகவல் 298



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# உள்மன ஆற்றல்

ஒரு விஞ்ஞானி. அவர் பெயர் ஹோ. ஒரு ஊசியைக் கண்டு பிடிப்பதற்காக அதிக காலமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அது எந்த ஊசி தெரியுமா? தையல் மிசினிலே இருக்கின்றதே அந்த ஊசி தான். அவருக்குப் பிடிபடாமல் இருந்த விடயம் என்ன என்றால் அந்த ஊசியின் கூர்மையான பாகத்திலே நூலை எப்படி சேர்ப்பது. சாதாரண மற்ற ஊசியிலே செய்கிறது மாதிரி நூலை நுழைக்க முடியாது. மற்றைய ஒரு பாகம் மிசினுக்கு உள்ளே போய்விடுகின்றது. அதனாலே அந்தப் பாகத்திலே சாதாரணமற்ற ஊசியிலே செய்கின்றது மாதிரி நூலை நுழைக்க முடியாது. அப்படியே நுழைத்தாலும் தைப்பது எப்படி சாத்தியமாகும்? இது தான் அவருக்கு இருந்த பிரச்சினை.

அதிக நாட்கள் யோசித்தார். தையல் மிசினிலே ஊசியின் வடிவமைப்பு அவருக்குப் புலப்படவில்லை. இரவு பகலாக அதே ஞாபகமாக இருந்தார். ஒரு நாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கனவு கண்டார். எப்படி என்றால்? அந்தக்கனவிலே அவரை ஒரு மலைச் சாதியினர் பிடித்துக் கொண்டு போகின்றார்கள். கொண்டு போய் ஒரு இடத்திலே கட்டிப் போடுகின்றார்கள். அந்த மலை சாதி மக்களினுடைய அரசன் ஒருவன் வருகின்றான். அவரைப் பாரத்து ஒரு உத்தரவு போட்டார். என்ன உத்தரவு தெரியுமா?

பொழுது சாய்வதற்குள் நீ தையல் மிசின் ஊசியைக் கண்டு படிக்க வேண்டும். அப்படி கண்டு பிடிக்கவில்லை என்றால் உன் தலையை வெட்டி விடுவோம். இது தான் அந்த அரசன் போட்ட கட்டளை. இவருக்கு என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. திருதிரு என்று முழித்தார். இந்த நேரத்திலே அந்த மலை சாதியினர் அவரைக் கத்திக்கத்தி வந்து பயங்கரமாக முழித்துக் கொண்டு டான்ஸ் ஆடுகின்றார்கள். தன்னைச் சுற்றி ஆடுகின்ற இவர்களை மிகவும் பயத்துடன் இவர் பார்த்தார். நேரம் ஆக ஆக தன்னுடைய இறுதி நேரம் நெருக்குவதை உணர்கின்றார். மிகவும் நெருக்கடியான நிலைமை. தன்னைச் சுற்றி ஆடுபவர்களை கவனிக்கின்றார்.

அவர்கள் கைகளிலே ஈட்டி மாதரி ஒரு ஆயுதம் வைத்திருந்தார்கள். அந்த ஆயுதத்தை இவர் கண்ணுக்கு நேராகக் கொண்டு வந்தார்கள். அதை அவர் பார்க்கின்றார். அந்த கூரான முனையை அவர் கூர்ந்து கவனிக்கின்றார். அந்த கூரான முனையிலே ஒரு சிறிய துவாரம் தெரிந்தது. உடனே அவருக்குத் திடீர் என்று ஒரு யோசனை உதயமாகியது.

இதைத்தானே நான் இவ்வளவு காலமாகத் தேடிக்கொண்டிருந்தேன். கூரான முனையிலே ஒரு சிறிய துவாரத்தைப் போட்டுவிட்டால் அதன் மூலம் நூலைச் செலுத்தி மறுமுனையை மிசினிலே வைத்துவிடலாமே தையல் மிசின் ஊசி தயார் என்று நினைத்தார். திடீர் என்று தூக்கம் கலைந்தது. உடனே தன் தலைமாட்டிலே இருந்த குறிப்பேட்டிலே இதனைக் குறித்து வைத்துக் கொண்டார். அதன்பின் அந்த ஊசியை அவர் செய்து முடித்தார். இது எப்படி என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இது சாத்தியம் தான்.

முழித்துக்கொண்டிருக்கின்றபோது நமக்கு ஏற்படுகின்ற சில பிரச்சினைகளுக்கு கனவிலே விடை கிடைப்பதுண்டு. உங்களிலே பல பேருக்கு இது போன்று அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். எந்த ஒரு செயலைப் பற்றி நினைக்கின்ற போதும் அந்தச் செயல் எங்கள் நினைவிலே ஒரு வடிவம் பெறுகின்றது. ஒரு செயற்றிட்டத்தை நாம் எந்த அளவுக்கு நன்றாக யோசித்துத் திட்டம் போடுகின்றோமோ அந்த அளவுக்கு அதை சுலபமாக செய்து முடிக்க முடியும்.

அந்த விஞ்ஞானி நினைத்த காரியம் அவர் எண்ணம் முழுவதையும் ஆக்கிரமித்தது. அதனாலே அவர் நினைத்தது கனவிலே உருவாகி அதற்கு செயல் வடிவம் கிடைத்தது. மனிதனுடைய உள் மனதிற்கு அவ்வளவு ஆற்றல் உண்டு என்று சொல்கின்றார்கள்.

தூக்கத்தை ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்துவது எப்படி? என்பதைப் பற்றியெல்லாம் இப்போது நிறைய ஆராய்ச்சி செய்கின்றார்கள். பயிற்சி எல்லாம் கொடுக்கின்றார்கள். அதனாலே தூக்கத்தை லேசாக நினைத்து விடாதீர்கள்.

எனக்கு வேண்டப்பட்ட ஒருவர். அவருக்கு தூக்கத்திலே நடக்கின்ற நோய். அதற்கு மருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். ஒரு நாள் அவரைப் பார்த்துக் கேட்டேன். ஏங்க! நீங்கள் தூக்கத்திலே நடக்கின்ற நோயிற்கு மருந்து சாப்பிடுகின்றீர்களே ஏதாவது முன்னேற்றம் தெரியுதா? என்றேன். தெரிகின்றது என்றார். எப்படி? என்றேன். முன்பெல்லாம் தூக்கத்திலே ஒரு 10 அடி தூரம் நடப்பேன் இப்போது 40 அடிவரைக்கும் நடக்கின்றேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மாபியாக்களின் கூடாரமாக மத்திய குழுவை மாற்றக்கூடாது!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் காட்டம்

(வவுனியா)

முடிந்தால் வழக்கை மீளப் பெற்று தமிழரசுக் கட்சியின் பொதுக் குழுவை கூட்டுங்கள். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக்கக் கூடாது எனவும் பொதுக் குழுவில் தேசிய பட்டியல் ஆசனம் பற்றி பேசப்பட்டு அது மாற்றப்பட வேண்டும் எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் யாப்பே அதன் முதுகெலும்பு. அதன் கொள்கைகள் அது பயணிக்கும் வழித்தடம். அந்த அடிப்படையில் ஒரு கட்சியை நிர்மூலமாக்குவதற்கு யாப்பை மீறிச் செயற்பட்டால் அதனை முடக்கலாம். இன்று எமக்கான சந்தேகம் இதுவே.

திருகோணமலையில் கட்சி மீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் எமது பொதுச் சபையானது முடக்கப்பட்டுள்ளது.

அப்போது இனிமேல் யாப்பு மீறல் செய்ய மாட்டோம் என்று பேசப்பட்டது.

ஆனால் மீண்டும் அதே யாப்பு மீறலை மத்தியகுழு செய்கிறது என்றால் இதன் நோக்கம் என்ன? பொதுக் குழுவிற்கு எதிராக நீதிமன்ற வழக்குகளை நடத்தியவர்கள்



யார் என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டிய விடயம்.

தலைவரை மாற்ற சம்மதித்தால் வழக்கை மீளப் பெறுவதாகச் சொன்னார்கள் முதல் அதைக் கண்டுபிடியுங்கள். பொதுக் குழுவை இயங்கச் செய்யுங்கள். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக மாற்றக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (8-250)

## மீனவருக்கு அடித்த அதிஷ்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கருநாட்டு கேணி கடற்கரையில் கரைவலை தொழில் செய்துவரும் தென்பகுதியினைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் கரைவலையில் அதிகளவான மீன்கள் சிக்கியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று மாலை கரைவலையில் சுமார் 8 ஆயிரம் கிலோ மீன்கள் சிக்கியுள்ளன.

குறிப்பாக திருக்கை மீன்களை அதிகளவில் காணப்பட்டது. பெரும்பான்மை இனத்தினை சேர்ந்த குறித்த மீனவர் தொழிலாளர்களை கொண்டு கரைவலை தொழிலை மேற்கொண்டு வருகின்றார்,

குறித்த மீனவர் ஒரே நாளில் இலட்சாதிபதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## திருவாசகமுற்றோதல்

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் திருவாசகமுற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)

## ஐஸ்போதையுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியில் இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கடை உரிமையாளர் 30 கிராம் ஐஸ் போதை போதைப் பொருளுடன் கிளிநொச்சி மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மற்றும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

## தூய்மையான இலங்கை தெளிவூட்டல் கருத்தரங்கு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட அரச அதிகாரிகளுக்கான "தூய்மையான இலங்கை" தொடர்பில் தெளிவூட்டல் கருத்தரங்கு நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது "ஒரு செழிப் பான தேசம் ஒரு அழகான வாழ்க்கை" என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய 'தூய்மையான இலங்கை' (கிளீன் ஶ்ரீலங்கா) திட்டம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலாளர் சாராதாஞ்சலி மனோகரன் அவர்கள் தெளிவுபடுத்தல் கருத்துரைகளை வழங்கினார்.

அரச பணியினை உத்தியோகத்தர்கள் திறப்பட மேற் கொள்ள வேண்டும் எனவும் அனைத்துத் துறைகளும் சமூகம், சுற்றுச்சூழல், நெறிமுறை சார்ந்து தங்கள் பணிகளை திறம்பட ஆற்றி மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற "கிளீன் ஶ்ரீலங்கா" தேசிய வேலைத் திட்ட நிகழ்வில் எடுத்துக் கூறப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

அரசாங்கத்தின் புதிய எண்ணக் கருக்களான வறுமையை ஒழித்தல், டிஜிற்றல் ஶ்ரீலங்கா, க்ளீன் ஶ்ரீலங்கா ஆகிய எண்ணக்கருவை எவ்வாறு செயற்படுத்தல்என்பது தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டது. (8-316)

## துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டரிக் கழகத்தினால் புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தம்பையா ரமேஷின் நிதியுதவியுடன் குறித்த பிரதேசங்களில் வசிக்கும் 10 மாணவர்களுக்கே துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி ஒட்டுசுட்டான் முல்/61 கிராம நிலதாரி பிரிவில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. (8)


# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

**Supply of Skilled, Semiskilled and Unskilled Workers to the University of Jaffna -2025/2026**

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m on **05th February 2025.**
2. Period of contract should be 365/6 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences Should be provided with Bids.
   - 3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   - 3.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least **Rs. 60 Million**
   - 3.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 20 Million.**
   - 3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 30
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, General Administration, University of Jaffna and inspect the bidding documents at the same address on any working day during working hours.
   Contact numbers: - Tele: 021 222 6517, Fax:- 021 222 6517.
5. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **31st January 2025** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs.**5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account Number 970000060000276** at any Branch of People's Bank in Island wide.
6. Bidders are strongly advised to attend the **Pre-bid meeting on 24th January 2025 at 10.00 am** in the Board Room of the University of Jaffna and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Chairman, Procurement Committee, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs, 05th February 2025** or be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period of 91 Days (should be as at 07th May 2025) from the date fixed for closing of bids or any extended period.
9. All bids shall be accompanied by a bid security for and which shall be;
   - In the form included with the Bidding document
   - In favour of Vice-Chancellor, University of Jaffna
   - For an amount of Rs. 400,000.00 Valid up to 5th June 2025 (120 days from the date of closing of bid)
   - Issued by one of the agencies
     a. A bank operating in Sri Lanka;
     b. A bank based in another country but the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;

**Chairman,**
**Procurement Committee,**
**University of Jaffna.**

(C-2004) **11.01.2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு லட்சம் வீரர்களை ரஷ்யாவிற்கு அனுப்ப வடகொரியா திட்டம்

## பதிலுக்கு ஏவுகணைகளை வழங்கவுள்ள ரஷ்யா

(மொஸ்கோ)

**உக்ரைனில் ரஷ்யாவின் போருக்கு உதவி செய்ய தனது நாட்டு இராணுவ வீரர்கள் ஒரு லட்சம் பேரை அனுப்ப, வட கொரியா திட்டமிட்டுள்ளது. இதற்கு பதில் உதவியாக அதிநவீன ஏவுகணை தொழில்நுட்பத்தை ரஷ்யா வழங்க முன் வந்துள்ளது.**



உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போர் தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர பல்வேறு நாடுகள் வலியுறுத்தி வந்தாலும் இருநாடுகளும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. "எங்களுக்கு எதிரான போரில் வடகொரிய இராணுவத்தை ரஷ்யா பயன்படுத்துவதாக" உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறார். இதற்கிடையே, வட கொரியா ஏற்கெனவே, ரஷ்யாவிடமிருந்து இராணுவ உபகரணங்களைப் பெற்று வருகிறது. இந்நிலையில், உக்ரைனில் ரஷ்யாவின் போருக்கு உதவி செய்ய ஒரு லட்சம் வீரர்களை அனுப்ப, வட கொரியா திட்டமிட்டுள்ளது. வடகொரியா ஒரு ஹைப்பர் சோனிக் இடைநிலை பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை மேற் கொண்டது. உக்ரைனுக்கு எதிரான போரில் உதவி செய்வதற்காக அதிநவீன ஏவுகணைத் தொழில் நுட்பத்தை வடகொரியாவுக்கு ரஷ்யா வழங்கியுள்ளதாகவும் புகார் எழுந்துள்ளது. (6)

# மியான்மார் இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில்

## 40 பேர் பலி; 20 பேர் காயம்



(நைய்பிடாவ்)

மியான்மர் இராணுவம் விமானப்படை மூலம் நடத்திய தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

மியான்மரில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அங்கு இராணுவத்திற்கும், ஆயுதம் ஏந்திய இன சிறுபான்மையினர், புரட்சிக் குழுக்கள் இடையே அடிக்கடி மோதல் நீடித்து வருகிறது.

இதில், பல பகுதிகளை ஆயுதக்குழுவினர் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். இதனால், அந்நாட்டு மக்கள் அகதிகளாக வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், ராம்ரீ தீவில் அந்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் மதியம் 1.30 மணியளவில், மியான்மர் இராணுவம் விமானப் படை மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் அங்கிருந்த 500 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீப்பற்றி எரிந்தன.

மேலும் இந்தத் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர். 20இற்கும் மேற்பட்டோர்கள் காயமடைந்துள்ளனர். (6)

## ஒரு தெய்வம் தந்த பூவே...

# பின்னணிப் பாடகரான ஜெயச்சந்திரன் காலமானார்



(டில்லி)

பிரபல பின்னணிப் பாடகர் ஜெயச்சந்திரன் உடல் நலக் குறைவால் நேற்று முன்தினம் தனது 80 ஆவது வயதில் காலமானார்.

கேரள மாநிலம் திருச்சூர் மருத்துவமனையில் உடல்நலக் குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். அவரின் மறைவுக்கு திரையுலகப் பிரபலங்கள் பலர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

கேரள மாநிலத்தின் எர்ணாகுளத்தில் பிறந்த ஜெயச்சந்திரன் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் 16,000 இற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

தமிழில் வசந்தகால நதியினிலே, கவிதை அரங்கேறும் நேரம், ராசாத்தி உன்ன காணாத நெஞ்சு, அந்தி நேர தென்றல் காற்று, இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையில், கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில், ஒரு தெய்வம் தந்த பூவே... கிழக்குச் சீமையிலே படத்தில் கத்தாழம் காட்டுவழி... உள்ளிட்ட பல சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார்.

சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருது, ஐந்து முறை கேரள மாநில திரைப்பட விருதுகள், கேரள அரசின் ஜே.சி.டேனியல் விருது மற்றும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது உள்ளிட்டவற்றைப் பெற்றுள்ளதுடன் நான்குமுறை தமிழ்நாடு மாநில விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# அமெரிக்காவுடன் கனடாவை இணைக்க வாய்ப்பில்லை

## ட்ரம்பின் கருத்திற்கு ட்ரூடோ பதிலடி

(ஒட்டாவா)

கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக மாற்றுவதற்கு பொருளாதார பலத்தை பயன்படுத்தலாம் என்ற அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பின் கருத்துக்கு தற்போது பிரதமர் பதவியிலிருந்து விலகியுள்ள ஜஸ்டின் ட்ரூடோ எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி கனடா பிரதமர் ஜஸ்டின் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அந்தப் பதிவில், "அமெரிக்காவுடன் கனடாவை இணைக்க வாய்ப்பில்லை" எனப் பதிவிட்டுள்ளார்.

மேலும், இதுபற்றி கனடாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மெலனி ஜோலி "ஒருபோதும் நாங்கள் பின் வாங்கப் போவதில்லை" என்று அவரது எக்ஸ் தளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில், "ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ட்ரம்பின் கருத்துக்கள் கனடாவை வலிமையான நாடாக மாற்றுவதைப் பற்றிய முழுமையான புரிதல் இல்லாததைத் தான் காட்டுகிறது.

கனடாவின் பொருளாதாரம் வலுவாக இருக்கிறது. நாங்கள் ஒருபோதும் பின் வாங்க மாட்டோம்" என்றும் தெரிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தைத்திருநாளின் போது சூரிய பகவானுக்கும் உழவர்களுக்கும் நன்றி செலுத்துவோம்.
>
> ~ பாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தைப்பொங்கல் திருநாளில் மதுபானசாலைகளை மூடுங்கள்

தைப்பொங்கல் தமிழர் திருநாள். நன்றி கூறுகின்ற பண்புடைமையின் சொந்தக்காரர் களாகிய தமிழர்கள், சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு தைத்திங்கள் முதலாம் நாள் சூரியனுக்குப் பொங்கிப் படைத்து தங்களின் நன்றியறிதலைச் செலுத்துகின்றனர்.

இவ்வாறு தமிழர் திருநாளாகிய தைப் பொங்கல் தினத்தில் தனித்துப் பொங்கிப் படைப்பது மட்டுமல்ல. மாறாக, எங்கள் வாழ் நாளில் ஆசாரசீலர்களாக இருப்போம் எனச் சூரியபகவான் முன்னிலையில் சத்தியம் செய்கின்ற நாளாகவும் தைத்திருநாளை நம்மவர்கள் போற்றுகின்றனர்.

எனவே அன்றைய நாளில் தமிழர் தாயகத்தில் உள்ள அத்தனை மதுபானசாலைகளையும் மூடுகின்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இங்கு புனிதமான பண்டிகைகளின்போது மதுபானசாலைகளை மூடுகின்ற ஏற்பாடுகள் அரசாங்கத்தால் அமுல்படுத்துவது மிகவும் அவசியம்.

இருந்தும் அதுவிடயத்தில் அரசாங்கம் அசமந்தமாக இருக்குமாயின், சம்பந்தப்பட்ட மாகாண ஆளுநர்கள் மேற்படி முடிவை எடுத்து, அதனை அமுல்படுத்த வேண்டும்.

அதுவும் சாத்தியமில்லை எனும்போது, மதுபானசாலை உரிமையாளர்கள் தாமாக முன்வந்து பண்டிகை நாட்களில் மதுபான சாலைகளைத் திறப்பதில்லை என்ற முடிவுக்கு வரலாம்.

ஆம், யார் எத் தொழிலைச் செய்தாலும் அதற்குள் தொழில் தர்மம் இருக்க வேண்டும். அதாவது மதுபானசாலைகள் அரச அனுமதிகளுடன் இயங்குவதாக இருந்தாலும் புனிதமான பண்டிகை நாட்களில் மதுபானசாலைகளை மூடுவதன் மூலம்; எத்தனையோ குடும்பங்களில் அந்த ஒரு நாளாவது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பண்டிகையைக் கொண்டாடுகின்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம்.

இஃது அந்தக் குடும்பத்தில் நிரந்தரமான மகிழ்வுக்கும் - ஒற்றுமைக்குமான களத்தை உருவாக்குவதாக அமையும்.

உண்மை. எத்தனையோ குடும்பங்களில் தந்தையர்கள் மது அருந்திவிட்டு வீட்டில் குழப்பம் செய்கின்றபோது, அதனால் அவரின் மனைவியும் பிள்ளைகளும் உறவினர்களும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இங்குதான் மதுபானசாலைகள் குற்றம் இழைக்கின்றன.

ஆகவே முக்கியமான திருநாட்கள், பண்டிகைகளின்போதாவது மதுபானசாலைகளை மூடும்போது அங்கு ஏதோவொரு வகையில் தொழில் தர்மம் பின்பற்றப்படுகிறது.

எனவே அரசாங்கம் அல்லது மாகாண ஆளுநர்கள் அறிவித்தாலென்ன, அறிவிக்காமல் விட்டாலென்ன மதுபானசாலை உரிமையாளர்கள் தாமாக முன்வந்து தைப்பொங்கல் திருநாளின்போது மதுபானசாலைகளை மூடி உதவ வேண்டும்.

# வெளிநாட்டுத் தூதர்களை சந்திக்க ஜனாதிபதியின் செயலாளர் முட்டுக்கட்டை

## சுட்டிக்காட்டினார் தயாசிறி; மறுதலித்தார் பிமல் ரத்நாயக்க

*(கொழும்பு)*

வெளிவிவகார அமைச்சரின் அனுமதியின்றி அமைச்சர்கள் வெளிநாட்டுத் தூதரகங்களின் தலைவர்களைச் சந்திப்பதற்கு தடை விதித்து ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்டதாக எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது குற்றம் சுமத்தினார்.

அமைச்சர்களுக்கு ஏன் இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என்று நாம் ஆச்சரியப்படுகிறோம்.

இது வடகொரியா போன்ற நாடுகளில் காணப்படும் நடவடிக்கையாகும் என்றார்.

ஆயினும் இதனைச் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க மறுதலித்ததுடன் அவ்வாறான தடைகள் எதுவும் விதிக்கப்படவில்லை நேற்று முன்தினமும் ஓர் இராஜதந்திரியைச் சந்தித்ததாகவும் சிறிது நேரத்திற்கு முன்பு கூட தான் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரைச் சந்தித்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் இன்னும் பாராளுமன்ற வளாகத்திலேயே இருக்கிறார்.

நான் அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த முடியும் என்று சபைத் முதல்வர் ரத்நாயக்க பதிலளித்தார். (ம-7)

# திருவாசக முற்றோதல்

### மண்டைதீவில்...

மண்டதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

### வேலணையில்...

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் நடைபெறும்.

### திருநெல்வேலியில்...

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் காலை 7 மணி தொடக்கம் நடைபெறும். (ம-7)

# ஒவ்வாமையினால் 13 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(ஹட்டன்)

ஹட்டன் பகுதியில் உணவு ஒவ்வாமையால் பாதிப்புற்ற 13 பாடசாலை மாணவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் கல்விவலயத்தின் கீழ் உள்ள டிக்கோயா பாடசாலையிலேயே குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது. மாணவர்கள் பாடசாலையில் மதிய உணவைச் சாப்பிட்டுவிட்டு வீடு திரும்பிய பிறகு தலைச் சுற்றல் மற்றும் வாந்தி போன்றவற்றால் மாணவர்கள் பாதிப்புற்ற நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# கடலில் மூழ்கிய ரஷ்ய பிரஜை பலி

## பாசிக்குடாவில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாசிக்குடா கடலில் நீராடச் சென்ற ரஷ்ய நாட்டுச் சுற்றுலாப் பயணி ஒருவர் நேற்று கடலலையால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 65 வயதுடைய கரிசன் ஓ என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று காலை பாசிக்குடா கடலில் நீராடிய போது கடலில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்ததை அவதானித்த கடற்படையினர் உடனடியாகச் செயற்பட்டு அவரை மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்தனர்.

அவரை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பருத்தித்துறையில் பட்டாசு கொளுத்திய இருவர் கைது

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் பட்டாசு கொளுத்திய இருவர் பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற மரண சடங்கு ஒன்றின் போது பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு அருகாமையில் அதிக சத்தமாக பட்டாசுகள் வெடிக்கவிடப்பட்டது.

இதன் சத்தம் காரணமாகப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குகளை கொண்டு நடத்த முடியாமல் இருந்ததனால் நண்பகல் 11:50 மணிக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டு நீதிமன்றப் பொலிஸார் ஊடாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் பட்டாசு கொளுத்திய இருவரைக் கைது செய்தனர். இதனால் 25 நிமிடங்களின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ்பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ம-7,60)

# சுற்றுலாவிகள் இலங்கையில் வர்த்தகம் செய்யத்தடை

## அநுர அரசு அதிரடி

சுற்றுலா விசாவில் தங்கியிருந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டினரை தடுக்கும் பொறிமுறையை அரசாங்கம் வகுக்கும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சுற்றுலா வீசாவில் வருகை தரும் வெளிநாட்டவர்கள் நாட்டில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் அதனை அரசாங்கம் பிரச்சினையாக இனங்கண்டுள்ளதாகவும் பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அவர், அதற்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாங்கள் ஆலோசித்து வருகிறோம், மேலும் இதுபோன்ற சட்டவிரோத செயல்களை தடுக்கும் பொறிமுறையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் இஸ்ரேலியப் பிரஜைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

# கல்வி அமைச்சின் வாகனங்கள் மாயம்

## தேசியக் கணக்காய்வு அறிக்கையில் வெளிக்கொணர்வு

கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட 140 வாகனங்கள் தற்போது அமைச்சகத்தில் இல்லை எனத் தேசியக் கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

கல்வி அமைச்சகம் தொடர்பாக சமீபத்தில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சொத்து மேலாண்மை தணிக்கை அவதானிப்புகளின் கீழ் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் போன 140 வாகனங்கள் தொடர்பான தகவல்களை தற்போது கண்டுபிடிக்க முடியாததால், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கல்வி அமைச்சின் தலைமை கணக்கியல் அதிகாரி கணக்காய்வு அலுவலகத்திற்குப் பதிலளித்துள்ளார்.

எனினும் இந்த வாகனங்களை சரியாக அடையாளம் காண வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும் உட்கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவ வேண்டும் என்று தணிக்கை அலுவலகம் கல்வி அமைச்சகத்திற்குப் பரிந்துரைத்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி – I

09

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இதுவும் மக்களுக்கு சிக்கலைத் தோற்றுவிக்கிறது. புதிய வட்டார முறையின் கீழ் இது மேலும் சிக்கலை உருவாக்கியுள்ளது. அதாவது ஒரு கிராம சேவகர் பிரிவு இரு அல்லது மூன்று துண்டுகளாக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று வட்டாரத்திற்குள் போய் விடுகிறது.

உதாரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள 214A இலக்கமுடைய தாண்டிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவு வவுனியா மாநகரசபையின் வட்டாரங்கள் 1 மற்றும் 5இற்குள்ளும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் வட்டாரங்கள் 8 மற்றும் 9இற்குள்ளும் பிரிபட்டுள்ளது. இவ்வாறு 137 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பிரிக்கப்பட்டு இரு உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குள் விழுகின்றன.

அவ்வாறு விழுவன மாவட்ட ரீதியில் கம்பஹாவில் 1 கிராம உத்தியோகத்தர் பிரிவும், களுத்துறையில் 8உம், கண்டியில் 24உம், மாத்தளையில் 9உம், நுவரெலியா 24உம், மாத்தறை யில் 5உம், யாழ்ப்பாணத்தில் 8உம், வவுனியாவில் 8உம், அம்பாறையில் 4உம், திருகோ ணமலையில் 3உம், குருநாகலில் 1உம், புத்தளத்தில் 3உம், அநு ராதபுரத்தில் 12உம், பதுளையில் 11உம், இரத்தினபுரி 16உம் ஆக மொத்தம் 137 கிராம உத்தி யோகத்தர் பிரிவுகள் பிரிக்கப்பட்டு இரு உள்ளூராட்சி அதிகார சபை களுக்குள் விழுகின்றன. இவ்வாறு வட்டாரங்களை கருது வோமானால் 144 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பிரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று வட்டாரத்திற்குள் போய்விடுகிறது.

### உள்ளூராட்சி அதிகார சபைகளின் வட்டாரங்களின் எண்ணிக்கையில் சமநிலை பேணப்படாமை

2012இல் தேசிய எல்லை நிர்ணயக் குழுவினால் உளளூராட்சி அதிகார சபைகளுக்கு வட்டாரங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் போது 2012இல் அவ் அவ் உள்ளூராட்சி அதிகார சபைகளில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையும் மற்றும் சனத்தொகையும் கணக்கில் எடுத்தே சபைகளின் வட்டாரங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப் பட்டது. உள்ளூராட்சி அதிகார சபைகளில் 2012 வரையில் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கிடையே உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சம நிலை காணப்படவில்லை. இதனால் 2015இல், சபைகளுக்கு வட்டாரங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் போதும் (சனத்தொகை விகிதாசாரத்திற் கேற்ப)சமநிலை காணப்படாமல் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இதனால் பல உள்ளூராட்சி அதிகார சபைகளில் உள்ள மக்கள் தங்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள்.

### 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டம் பற்றி

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தில் இனங்காணப்பட்ட வழுக்களை திருத்துவதற்காக 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் 2017 ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

இச்சட்டத்திற்கமைய ஒவ்வோர் உள்ளூராட்சி அதிகார சபையினதும் அதிகாரப் பிரதேசத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 60% வட்டாரங்களிலிருந்து வெற்றியீட்டுகின்ற உறுப்பினர்கள் மற்றும் எஞ்சிய 40% மேலதிக நபர்களின் பட்டியலிலிருந்து அல்லது வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர்களைக் கொண்டு பூரணப்படுத்தல் வேண்டும்.

2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் சட்டத்திற்கமைய சபையொன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 25% பெண்கள் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப் பட்டது.

### உள்ளூராட்சி அதிகார சபை அதிகார பிரதேசத்தினுள் கட்சிகள் பெற்றுக் கொள்ளும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு மொத்த உள்ளூராட்சி அதிகார சபை அதிகார பிரதேசத்தினுள் பெற்றுக்கொள்ளும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களின் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

அதற்கமைய இம்முறைமை 100% விகிதாசார முறையின் அடிப்படையில் உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்ற ஒரு முறையாகத் தென்படுகின்றது.

### வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றீட்டிய அனைத்து வேட்பாளர்களும் கட்டாயமாக அந்தவட்டாரத்தை பிரதிநிதித்துவப் படுத்துவார்கள்

அதேபோன்று உறுப்பினர்களை நியமனம் செய்கின்ற போது வட்டாரத்திற்காக போட்டியிட்டு வெற்றீட்டிய அனைத்து வேட்பாளர்களும் கட்டாயமாக அந்த வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அச்சபைக்கு நியமனம் செய்யப்படுகின்றனர்.

அதற்கமைய வட்டாரத்திற்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினரொருவர் இம்முறைமையின் மூலம் கட்டாயமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

ஏதேனும் ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு விகிதாசாரமாகக் கிடைக்க வேண்டிய உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையை விட அவர்கள் வெற்றியீட்டியுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படின் வெற்றியீட்டிய வட்டாரத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாக உரித்துப் பெரும் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கைக்காக மேலதிக நபர்களின் பட்டியலிலிருந்து அல்லது வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர்களிலிருந்து பெயர் குறிப்பதற்கு கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

### மேன்மிகை உறுப்பினர்கள் அல்லது தொங்கு ஆசனங்கள்

அதேபோன்று ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு அவர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய விகிதாசாரமாக உரித்துடைய உறுப்பினர் எண்ணிக்கையை விட வட்டார மட்டத்தில் வெற்றியீட்டி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமெனில், அந்த அதிகரித்த எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையொன்றினால் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்க முடியும். மேலும் அதிகரிக்கின்ற ஆசனங்களின் எண்ணிக்கை தொங்கு ஆசனம் (Over Hang) என அழைக்கப்படும்.

இவ்வாறு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கவில்லையெனில், ஏனைய அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களுக்கு உறுப்பினர் பதவிகளை வழங்குவதற்கான சாத்தியப்பாடு இல்லையென்பதால், அவ்வாக்காளர்களுக்கு ஏற்படக்கூடிய அநீதி தவிர்ப்பதற்காக தொங்கு ஆசனம் (Over Hang) இச்சட்டத்தினுள் தோன்றியுள்ளது.

இதற்கமைய காணப்பட்ட இரண்டு தேர்தல் முறைகளை (பெரும்பான்மை (தொகுதிவாரி) முறைமைகள் மற்றும் விகிதாசார முறைமைகள்) விடவும் சாதகமான அம்சங்கள் இம்முறையினுள் காணப்படுவதாகவும் இனங்காணப்பட்ட சில பிரச்சினைகளை சட்ட ஏற்பாடுகளின் மூலம் சரி செய்து கொண்டு இந்த முறைமையை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவது மிகவும் பயனுள்ளதென்பது தெளிவாகின்றது.

### உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கமைவான முக்கியமான திருத்தச் சட்டங்களாவன.

1. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தப்பட்ட) சட்டம்.

2. 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தப்பட்ட) சட்டம்.

3. 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தப்பட்ட) சட்டம் ஆகும்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதவாச்சியில்...

40 வயதுக்குட்பட்ட பெண் ஆவார்.

மேலாடை மற்றும் லெக்கின்ஸ் ஆகிய ஆடைகளைக் குறித்த பெண் அணிந்துள்ளார். அத்துடன் பெண்ணின் அருகில் இருந்த பையிலிருந்து கொழும்பில் இருந்து மதவாச்சிக்கு இ.போ.சபை பேருந்தில் பயணித்த சிட்டை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

பெண்ணின் உடலில் பல காயங்கள் காணப்பட்டுள்ள நிலையில், இது வொரு கொலையெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதவானின் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக உடல் அநுராதபுரம் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,250)

## பொலிஸ் எனக்...

எனக்கூறி அவரது உடைமைகளை சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது அவரது உடைமையில் இருந்த 50 ஆயிரம் ரூபாய் பணத்தினைக் கொள்ளையிட்டுத் தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் அப்பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் வழிப்பறிக் கொள்ளையர்களை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## மருந்துகளின்...

ஒழுங்குபடுத்தல் அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

மருந்துகளின் விலைகளைக் குறைக்கும் நடவடிக்கையை விரைவில் முன்னெடுக்கவுள்ளதாக ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உயரதிகாரி தெரிவித்தார். (ம-7)

## யாழ்.கல்வி...

மணி முதல் யாழ்.வலம்புரி ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

வலம்புரிப் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மீன்பிடி மற்றும் நீரியல்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட் ஆகியோர் கலந்து கொள்வதோடு கௌரவ விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரனும் கலந்து சிறப்பிக்க உள்ளார். (ம-7)

## ஹெரோயின்...

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைக்குள் 25 கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருளை கொண்டுசென்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டதையடுத்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதி கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்த தனது நண்பனுக்கு உணவு கொண்டுசென்ற பொதியில் ஹெரோயினை மறைத்துக் கொண்டு சென்ற சந்தர்ப்பத்தில் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ம-7)

## அநுர அரசாங்...

சிங்கள மக்களும் ஆதரவளிப்பார்கள். ஏனெனில், சிங்கள மக்களும் தற்போது நேர்மனப்பான்மையில் உள்ளார்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளமை கவனத்திற்குரியது. இந்த அரசாங்கத்துக்குப் பெரும்பான்மைப் பலம் உள்ளது. அனைத்து இன மக்களும் இந்த அரசாங்கத்தில் பங்குதாரர்களாக உள்ளனர். ஆகவே அரசியல் தீர்வு விவகாரம் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். தீர்வுத் திட்டத்தில் அரசாங்கம் சிறந்த தீர்மானத்தை எடுத்தால் சிங்கள மக்களும் ஆதரவளிப்பார்கள் ஏனெனில் சிங்கள மக்களும் தற்போது நேர்மனப்பான்மையில் உள்ளார்கள்.

அரசாங்கம் சிறந்த முறையில் செயற்பட்டாலும் ஒருசில துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடளிக்கச் சென்ற பெண் மிகக் கொடூரமான முறையில் பொலிஸாரினால் தாக்கப்பட்டுள்ளார். இந்த நாட்டில் என்ன நடக்கிறது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார். (ம-7)

## வாக்குறுதிகளை...

பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போதுள்ள அரசியல் நிலைமைகளைப் பார்க்கும் போது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் இன்று கவலையுடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியிருக்கிறது. இன்று அவர்கள் கவலைப்படுகின்றனர்.

தாங்கள் ஏமாற்றமடைந்ததாக இன்னும் சிலர் வருத்தப்படுகின்றனர். அதனால் இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் ஐக்கிய தேசியக்கட்சியாக ஐக்கியப்பட்டு, நாட்டு மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (ம-7)

## வடக்...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசியப் பாதுகாப்பைப் பலவீனப்படுத்தும் வகையில் வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன. இந்த [illegible] 30 [illegible]கால பிரிவினைவாதப் போராட்டத்தை எதிர்கொண்டது என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள்தான் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதே தவிர அந்த அமைப்பின் நோக்கம் அழிவடையவில்லை. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் கொள்கையை கொண்டுள்ளவர்கள் இன்றும் உள்ளார்கள். ஆகவே தேசிய பாதுகாப்பு அரசியல் தேவைகளுக்காக பலவீனப்படுத்தக்கூடாது என்றார். (ம-7)

## கிளிநொச்சியில்...

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.01.10
சீட்டிழுப்பு இலக்கம் 5712
P 0 4 2 5 2 2
அத சம்பத P 2 5 2 2
சீட்டிழுப்பு இலக்கம் 287
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1742
R 13 25 47 72 R
Double Chance 11910

மெகா பவர்
திகதி 10/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2060
L 12 02 61 62 75

லக்கி 7 VIP
திகதி 2025.01.10
சீட்டிழுப்பு இலக்கம் 538
T 7 7 4 6 3 8 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3954
சீட்டிழுப்பு திகதி 10.01.2025
K 02 25 33 60
K

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.10
சீட்டிழுப்பு இலக்கம் 1021
மீனம் 16 17 37 52 மீனம்
45888 05

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.01.2025 வெற்றி வாரம் 420
U 0 7 9 5 4 4
88849
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,893,985.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2686
சீட்டிழுப்பு திகதி 2025.01.10 தினம் வெள்ளிக்கிழமை
22 43 68 75 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,174,141.60

சனிதா
திகதி 10.01.2025 வெற்றி வாரம் 4847
34 49 60 67 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,459,664.40
88941

சசிரி
வெற்றி வாரம் 597
சீட்டிழுப்பு திகதி 10.01.2025
வெள்ளிக்கிழமை
05 43 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4398
சீட்டிழுப்பு திகதி 10.01.2025 தினம் வெள்ளிக்கிழமை
08 49 57 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,502,395.20
266017

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 11 07 15 27 69
1862
10.01.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,476,456.40

அட கோட்டிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2512
சீட்டிழுப்பு திகதி: 2025.01.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,725,413.60
16 56 57 63 X
391381

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

X MARD
EVERYWHERE FOR YOU

யாழ்.கோப்பாயில் பிரம்மாண்டமான சூப்பர் மார்க்கெட்

# திறப்பு விழா

ஜனவரி | 13 | 2025

திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு

MANIPAY ROAD, KOPAY NORTH, KOPAY
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)

X MARD திறப்பு விழாவை முன்னிட்டு விசேட தள்ளுபடி

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~695~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மேலும் பல பொருட்கள்..
விசேட விலைக்கழிவுடன், சலுகை விலையில் பெற்றுக்கொள்ளலாம்

0742327545 MANIPAY ROAD, KOPAY NORTH, KOPAY
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
(C-2003)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2005)

Architecural CAD Centre
Personal & Group Classes
Palley Road Kondavil East
Link:0775116320
Auto CAD
2D-Drawing & 3D Modeling
Technical College Students
Lecture by;Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD Software(2d&3D)
University of Peradeniya.
Cert.in Advance 3D Modeling in Auto CAD
University of Moratuwa.
(C-2011)

## Technicians தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆண்டெனா விற்பனை மற்றும் சர்விஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆண்டெனா பிட்டிங்கில் நன்கு அனுபவமுள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ டிரைவிங் செய்யக்கூடிய Technicians ஒருவர் உடன் தேவை. தங்குமிடம் உண்டு, சம்பளம் மற்றும் கமிஷன் உட்பட Rs.100,000/= வரை சம்பாதிக்க முடியும். தொடர்பு கொள்ளவும்.

T.ராஜ்குமார் : 077 771 0785
(525)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | -235/= |
| 1Kg சிவப்பு பருப்பு | -275/= |
| 1Kg தீட்டல் பச்சை | -255/= |
| 1Kg சர்க்கரை | -265/= |
| 1Kg பயறு | -560/= |
| 1Kg கடலை | -490/= |
| 1Kg பொன்னி | -237/= |
| 1Kg சிவப்பு கௌபி | -660/= |
| 1Kg Prima கோதுமை மா | -160/= |
| 01 மங்களம் ஊதுபத்தி | -125/= ~~150/=~~ |
| 01 டசின் கற்பூரம் | -290/= ~~370/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | -170/= ~~240/=~~ |

பொங்கல் பானை விசேட விலைகள்



| Size/ No | விலை |
|---|---|
| 08 | 400/= |
| 12 | 630/= |
| 14 | 780/= |
| 16 | 890/= |
| 18 | 980/= |

பொங்கலுக்கு தேவையான பொருட்களை விசேட விலைகளில் எம்மிடம் கொள்வனவு செய்யலாம்.

Facebook:- happy basket.lk

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(532)
Happy Supermarket
0777 8080 30

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
02.11.1941

மறைவு
14.12.2024

கடந்த 14.12.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் வல்லிபுரம் தம்பையா

(ஓய்வுநிலை வங்கி உத்தியோகத்தர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 13.01.2025 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் புற்றளைப் பிள்ளையார் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் அன்னாரது இல்லத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். மேற்படி நிகழ்வுகளில் தவறாது பங்கேற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப் பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

(C-2001)

கந்தஉடையார் ஒழுங்கை,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

மலர்வு
1952 . 11 . 07



உதிர்வு
2023 . 12 . 25

கடந்த 2023.12.25 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் வேலுப்பிள்ளை குமாரசாமி

(சந்திரன்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நாளை 2025.01.12 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற உள்ளதால், தாங்களும் வருகைதந்து எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

7 ம் வட்டாரம், சிவநகர்,
புதுக்குடியிருப்பு.
(C-2002)

குடும்பத்தினர்
077 109 2169

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.